சித்தர்காடு ஊராட்சியில் திருமண மண்டபம்

*184 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியம் சித்தர்காட்டிலுள்ள (பஞ்சாயத்து) அறிஞர் அண்ணா திருமண மண்டபம் கட்டுவதற்கான வேலை எப்போது துவங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 24—9—1970-ல் துவங்கப்பட்டு, 4—8—1973-ல் முடிக்கப்பட்டது.

Share capital of members in Land Development Banks.

*185 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to charge the procedure of collecting share capital from the loanees in the Primary Land Development Banks in Tamil Nadu ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) இந்தக் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.?

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட தொடக்க நிலவள வங்கிகள் தொடங்கும்போது விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிற நேரத்தில் அவர்களிடமிருந்து 5 சதவிகிதம்தான் பங்குத் தொகை வசூலித்தோம். ஆனால் இன்று அதை 10 சதவிகிதமாக மாற்றியிருக்கிறார்கள். எனவே அந்தச் சங்கடத்தைப் போக்க மீண்டும் 5 சதவிகிதமாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதுதான் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று விடை அளித்திருக்கிறேன்.

பல்லடம் வட்டத்தில் கிணறுகள் வெட்ட கடன்கள்

*186 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் வட்டத்தில் புதிய கிணறுகள் வெட்ட நிலவள வங்கிகள் பணம் கொடுக்க மறுப்பதற்கான காரணங்கள் யாவை.?